

தமிழ்நாடு மாநில தடகள சங்கத்தின் 2026–2029 ஆம் ஆண்டின் சீனியர் துணை தலைவராக டாக்டர் எ.வ.வே.கம்பன் தேர்வு செய்யப்பட்டதை முன்னிட்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களிடம் வாழ்த்தும் பெற்றார். உடன் இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி,எம்.எல்.ஏ., பெ.சு.தி. சரவணன்,எம்.எல்.ஏ., பிரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், து.கென்னடி, கே.புகழேந்தி, எம்.ரமேஷ், கே.ஆனந்தன், ஆர்.ஆனந்தன், சி.பிரவு ஏ.அரிபிரசாத், ஏ.சீனுவாசன் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலமாக ”உலகம் உங்கள் கையில் திட்டத்தை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 14 கல்லூரிகளை சேர்ந்த 6158 மாணவ, மாணவியர்களுக்கு கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் விலையில்லா மடிக்கணினியை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### புழல் – பொப்பிலிராஜா அரசுப் பள்ளி

# மாற்றுத்திறன் மாணவர்களுக்கு பல்வகைத் திறன் பூங்கா - உபகரணங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, ஜன.8-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (06.01.2025) சென்னை, புழல், பொப்பிலிராஜா அரசு மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான பல்வகைத் திறன் பூங்காவினை திறந்து வைத்து, மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்கள்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், 2024--25-ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழ்நாடு சட்டப் பேரவையில், 24.06.2024 அன்று, மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புலன் உணர்வுத் திறன், அறிவுத்திறன், பெருந்தசை இயக்கத்திறன் மற்றும் நுண்தசை இயக்கத்திறன் ஆகியவை மேம்படுவதற்காக, அவர்களின் பல்வகைப் புலன்கள் தூண்டப்பட்டு விளையாட்டு வாயிலாக கற்றல் அனுபவங்களைப் பெறத்தக்க வகையில் பல்வகைத் திறன் பூங்கா உருவாக்கப் படும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டார்.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக தமிழ் நாட்டின் 20 மாவட்டங்களில் மொத்தம் 20 பல்வகைத்திறன் பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு பூங்காவிற்கும் தலா ரூ.13 லட்சம் வீதம், ரூ.2.6கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மாவட்டத்தில் புழல் ஒன்றியத்தில் பல்வகைத்திறன் பூங்கா தற்போது முழுமையாக நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா சாதாரண விளையாட்டிடமாக இல்லாமல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பார்த்தல், கேட்டல், தொடுதல் மற்றும் சமநிலை போன்ற பல்வேறு உணர்திறன்களைத் தூண்டும் வகையில் சிறப்பான வடிவமைப்புடன் உருவாக்கப்பட்ட பூங்கா ஆகும்.

அனைத்துக் குழந்தைகளும் ஒன்றிணைந்து விளையாடவும், விளையாட்டின் மூலம் கற்கவும் ஏதுவான சிறந்த இடமாகும். இதன் மூலம் புழல் ஒன்றியத்தில் 1 முதல் 12 வகுப்பு வரை கல்வி பயிலும் 410 சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்கள் பயனடைவர்.

பூங்காவில் நிறு வப்பட்டுள்ள விளையாட்டு மற்றும் உணர்திறன் உபகரணங்கள்

- சறுக்கு (Slide)
- சுழல் மேடை (Merry-Go-Round)
- ஊஞ்சல் (Swing)
- சீசா (Sea-Saw)
- பல்வேறு பரப்பு கொண்ட கட்டங்கள் (Blocks of Different Textures)
- பந்து தடாகம் (Ball Pool)
- காற்றாடி ஓசை (Wind Chime)
- பூந்தொட்டிகள்
- கூடைப்பந்து அமைப்பு மற்றும் பந்து
- எறிபந்து
- வாலிபால்
- ஸ்கிப்பிங் கயிறு - 4
- செயல்முறைப் பலகை Occupational Board
- Water Kettle - 2

பயன்கள்:

இந்த பல்வகைத்திறன் பூங்காவில் நிறு வப்பட்டுள்ள சறுக்கு, ஊஞ்சல், சீசா மற்றும் சுழல் மேடை போன்ற இயக்க உபகரணங்கள் குழந்தைகளின் சமநிலை, உடல் கட்டுப்பாடு மற்றும் இடவெளி உணர்வை மேம்படுத்துவதாக அமையும்.

பந்து தடாகம், பல்வேறு பரப்புகள் கொண்ட கட்டங்கள், பூந்தொட்டிகள் மற்றும் காற்றாடி ஓசைகள் போன்ற உணர்திறன் கூறுகள் தொடுதல், ஒலி மற்றும் இயற்கை உணர்வை மேம்படுத்தி மனஅமைதியை ஏற்படுத்துவதாக அமைந்திடும்.

மேலும், கூடைப்பந்து, எறிபந்து, வாலிபால், ஸ்கிப்பிங் கயிறு மற்றும் செயல்முறைப் பலகை போன்ற செயல்பாட்டு உபகரணங்கள் கை-கண் ஒருங்கிணைப்பு, தசை வலிமை, குழுவாக விளையாடும் திறன் மற்றும் நுணுக்கமான வேலை செய்யும் திறன்களை மேம்படுத்தத் துணை புரியும்.

பயன்பெறுவோர்:


இந்த உபகரணங்கள் புற உலகச் சிந்தனை இல்லாமை (Autism), கவனக்குறைவு மற்றும் அதீத செயல்பாட்டுக் குறைபாடு (ADHD) மற்றும் மூளை முடக்குவாதம் போன்ற சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் சிகிச்சைத் தன்மை கொண்ட விளையாட்டு அனுபவத்தை வழங்குகின்றன. இந்தப் பூங்கா அவர்களுக்கு விளையாட்டு வாயிலாக இயன்முறை சிகிச்சை அளிக்க ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் 1 முதல் 12 வகுப்பு வரை கல்வி பயிலும் சிறப்பு கவனம் தேவைப்படும் 10482 மாணவர்கள் பயனடைவர்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர். ச. கண்ணப்பன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா, இணை இயக்குநர் வை.குமார், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபீர், மக்கள் பிரதி நிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ - மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மடிக்கணினி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலட்சுமி, அமலு எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அசோக் குமார் மற்றும் ராவுத்தநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த ஒன்றிய சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் அசேன் ஆகியோர்களின் ஏற்பாட்டில், ராவுத்தநல்லூர் ஊராட்சி அ.தி.மு.க. மற்றும் த.வெ.க கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கழக இரு வண்ண வேஷ்டிகளை அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## கோவையில் மடிக்கணினி வழங்கல்

கோவை, ஜன.8-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கத்தில் 4,320 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரி யப்பனவர், கோவை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் வழங்கினர். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், ஆணையாளர் மா.சிவ குருபிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மகளிர் திட்டம் திட்ட அலுவலர் மதுரா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மேற்கு மண்டல குழுதலைவர் தெய்வயானை தமிழ்மறை, பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன், மாமன்ற உறுப்பினர் சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் இலவச பட்டா வழங்கல்

ஈரோடு, ஜன.8-

ஈரோடு மாவட்டம் 1வது மண்டலம் 3வது வட்டத்தை சார்ந்த குறிஞ்சி நகர், மாதேஸ்வரன் நகர், கலைஞர் நகர் ஆகிய பகுதிகளை சார்ந்த 51 குடும்பங்களுக்கு மண்டல தலைவர் ப.க.பழனிசாமி தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலையில் பட்டா வழங்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் க.சின்னையன், 3வது வட்ட கழக செயலாளர் கருணாநிதி, மாணிக்கம், ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பட்டா பெற்றவர்கள் தங்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சருக்கும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஆகியோருக்கு நன்றியை தெரிவித்தனர்.

## தங்க தராசு

தவிட்டுக் கடை
தராசின் மீது உட்காரும்
‘ஈ’க்கு மதிப்பு கிடையாது

ஆனால்,
தங்க நகைக் கடை
தராசில் உட்காரும் ‘ஈ’
சில ஆயிரம்
ரூபாய்க்கான
மதிப்பை
பெற்றுவிடும்

ஆம்
தி.மு.க.என்பது
தங்க நகைக்கடை
தராசு

என்ன
நாஞ் சொல்றது...



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### செஞ்சி கிழக்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில்!

# திராவிடப் பொங்கல் விளையாட்டுப் போட்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன.8-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சிகிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கோனை ஊராட்சி, செஞ்சி மத்திய ஒன்றியம் கணக்கன் குப்பம் ஆகிய ஊராட்சிகளில் சமூக நீதிக்கான திராவிடப் பொங்கல் வாலிபால், ஹாக்கி விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசெஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா சக்தி முருகன் ஆகியோர்முன்னிலை வகித்தனர்.செஞ்சி மத்திய ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, ஆகியோர்அனைவரையும் வரவேற்றனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றவாலிபால் மற்றும் ஹாக்கி விளையாட்டுப் போட்டியினை

விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் அரங்க ஏழுமலை பிரசன்னா, ஆறுமுகம், குமார், இக்பால், தாட்சயானி கார்த்திகேயன், திருநாவுக்கரசு, சாரங்கபாணி, சத்யா கார்த்தி கேயன், மகேஸ்வரி பொற்செழியன், ரேவதி கணேசன், பழனி, பாலகிருஷ்ணன், குமார் சக்திவேல், அறிவழகன், சென்னாலூர் மணி, ராமு, காந்தி,பழனிவேல் கணேசன், முத்து,பன்னீர், மகேஷ், தினகரன், கனகன் குப்பம், கெங்கவரம் ஆனந்தராஜ், ஆரோக்கிய தாஸ், லட்சுமணன், டீ கடை ரமேஷ், கோபால், உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

பெரம்லூர், ஜன.8-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை,

டி.கே. ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த்தன், ஏ.கேஅருண், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் செயற்குழு ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. தலைமையில், மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்து பேசுகையில் வரும் தைத்திங்கள் தமிழர் திருநாள் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்தும், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்) குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார், இக்கூட்டத்தில், மாநில மகளிரணி துணைச்செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வ.அன்பழகன், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா. ஸ்ரீதரன், வடக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.ஆறுமுகம், கே.திருநாவுக்கரசு, பாப்பாத்தி நடராஜன், வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் வீ.சு.வீரபாண்டியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.